**OS.No.238/2024, Dated 22.07.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 22nd day of July 2025.

**வா.சா.1 - இந்திரா க/பெ.செல்வகுமார் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

பாபு அனுபவத்தில் இருக்கும் 27 செண்டில் நான் 15 செண்டு நான் கோருகிரேனா என்றால் அந்த 15 செண்டு என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. நான் தான் பயிர் வைக்கிறேன். பூமியில் அளந்து சரிபார்க்க வேண்டுமென்று நான் மனு கொடுக்கவில்லை. பிரதிவாதி தரப்பில் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. வருவாய் துறையில் இருந்து வந்து இடத்தை அளந்தார்கள். நான் சொல்லும் 15 செண்டு பூமியில் இல்லை என்று அவர்கள் அளந்து சரிபார்த்து என்னிடம் கூறி சென்றார்கள் என்றால் இல்லை. வருவாய் துறையினரிடம் எனக்கு ஒரு ஏக்கர் தான் சொந்தம் என்றும், 15 செண்டு என்பது இல்லை என்று நான் ஒத்துக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் இல்லை. நான் அவ்வாறு வருவாய்துறையினரிடம் கொடுத்த வாக்குமூலம் தற்போதும், வருவாய் துறையினரிடம் உள்ளது என்றால் இல்லை. தற்போதும், வருவாய் ஆவணங்களை பார்த்தாலும், நில அளவையரின் உதவியுடன் அளந்து பார்த்தாலும், உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. சர்வே எண் 117/7பி தற்போது இல்லை என்றாலும் உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றாலும் சரியல்ல. எனக்கான ஒரு ஏக்கரான 0.40.5 ஏர்ஸ் நிலத்தை தனியாக சர்வே எண் 117/7பி/1பி என்று உட்பிரிவு செய்து எனக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஒரு ஏக்கர் 15 செண்டு தான் சொந்தமாகும். எனக்கு 1 ஏக்கருக்கு மட்டும் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதி நிலத்திற்கு பட்டா இன்னும் வழங்கப்படவில்லை. மின் இணைப்பு பெறுவதற்காக மட்டுமே தனிப்பட்டா வழங்கப்பட்டது. எனக்கு 1 ஏக்கருக்கு மட்டும் தனிப்பட்டா வழங்கப்பட்டது குறித்து நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் நான் மின் இணைப்பு பெறுவதற்காக ஒரு ஏக்கருக்கு தான் பட்டா கோரியிருந்தேன். பாபு, லட்சுமியிடம் வாங்கிய 27 செண்டு மற்றும் அவருடைய இதர இடங்களுடன் சேர்த்து சர்வே எண் 117/7பி /1ஏ என்று 31 ஏர்ஸ்க்கு பாபுவின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு ஒரு வருடம் முன்பு தான் அது தெரியவந்தது. மேற்சொன்ன 31 ஏர்ஸ் பாபுவின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. 01.12.2003ம் தேதி

எனது தந்தை லட்சுமியிடம் வாங்கிய 15 செண்டு என்பது பூமியில் இல்லை என்றாலும், கற்பனையானது என்றாலும் சரியல்ல. ஏற்கனவே நான் வாங்கிய ஒரு ஏக்கரில் தான் அந்த 15 செண்டு உள்ளது என்றாலும், கூடுதலாக 15 செண்டு பூமியில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல. தற்போதைய உட்பிரிவு அளவுகளும், சுற்றெல்லை விபரங்களும் குறிப்பிடப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு சொத்தே இல்லை என்றால் சரியல்ல. ஒரு முறை நாங்கள் அளந்தோம். மின் இணைப்பு பெறுவதற்காக ஒரு ஏக்கரை மட்டும் அளந்தோம். தாவா சொத்தை நீதிமன்றம் மூலமாக அளப்பதற்கு நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.07.22 05:53:08 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.